NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 15 September 2020

# என்யுஎஸ் தாதிமைத் துறை உறுப்பினருக்கு உலக அங்கீகாரம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தாதிமைத் துறை யின் உறுப்பினரான இணைப் பேராசிரியர் வாங் வென்ரு, உலக அளவில் புகழ்பெற்ற அமெரிக்க தாதிமைப் பயில கத்தின் கல்வியாளராக பெயர் குறிப்பிடப்படுள்ளார்.

இவ்வாண்டில் மொத்தம் 230 பேர் உலக அளவில் இந்தப் பயிலகத்தின் கல்வியாளர்களா கத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் சிங்கப் பூரிலிருந்து தேர்வு பெற்றிருக் கும் ஒரே நபர் 52 வயது பேரா சிரியர் வாங் வென்ரு.

வாஷிங்டனைத் தளமாகக் கொண்டுள்ள அமெரிக்க தாதி மைப் பயிலகத்தில் 2,700க்கு மேற்பட்டோர் கல்வியாளர் களாக உள்ளனர். அவர்கள் தாதிமைத் துறையின் அம்சங்க ளான கல்வி, நிர்வாகம், செயல் முறை, ஆய்வு ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்கள். தாதி மைத் துறையின் செயல்முறை கள், சுகாதாரக் கொள்கைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களில் இருந்து இக்கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

சீன நாட்டவரான பேராசி ரியர் வாங் 2012லிருந்து சிங் கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தின் தாதிமைத் துறையில் அங்கம் வகிக்கிறார். தாதி மைத் துறையில் கடந்த 28 ஆண்டுகளாக தாதியாக, கல்வியாளராக, ஆய்வாளராக இவர் அனுபவம் பெற்றுள்ளார்.

இவரது ஆய்வு நாள்பட்ட நோய்கள், குறிப்பாக இதய நோய்களை மையமாகக் கொண்டது. பேராசிரியர் வாங் தற்போது நோயாளிகளின் இல்லங்களில் கைபேசிகள், கம்பியில்லாத சாதனங்கள் மூலம் பயன்படுத்தக்கூடிய புது மாதிரியான இதயம் தொடர் பான மறுவாழ்வு முறை பற்றிய ஆய்வை மேற்கொண்டு வருகிறார். தாதிமைத் துறை யின் இளம் கல்வியாளர்கள், முனைவர் கல்வி மாணவர் களுக்கும் இவர் போதிக்கிறார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.